செ.வெ.எண்-23 நாள்-09.09.2021

# அரியலூர் மாவட்டம்
# 400 இடங்களில் மாபெரும் கொரோனா வைரஸ் தடுப்பூசி முகாம் 12.09.2021 அன்று நடைபெறவுள்ளது – பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், 12.09.2021 அன்று மாவட்டம் முழுவதும் கொரோனா வைரஸ் மாபெரும் தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளதை முன்னிட்டு, மாவட்ட அளவிலான அனைத்துத்துறை அலுவலர்களுடனான கலந்தாலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (09.09.2021) நடைபெற்றது.

உலகளாவிய கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கொரோனா மூன்றாம் அலையின் தாக்கத்திலிருந்து பாதுகாத்து கொள்வதற்கு கொரோனா தடுப்பூசியே பாதுகாப்பானதாகும். ஆகவே மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் அறிவுரையின்படி, கொரோனா வைரஸ் மாபெரும் தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளதால் மாவட்ட அளவிலான அனைத்துத்துறை அலுவலர்களுடன் முன்னேற்பாட்டு பணிகள் குறித்த கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அரியலூர் மாவட்டத்தில் 400 இடங்களில் 40,000 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் வண்ணம் கொரோனா வைரஸ் தடுப்பூசி முகாம் நடத்துதல், வீடுவீடாக சென்று கணக்கெடுப்பு பணிகள் மூலம் ஊக்குவிப்பு செய்தல், ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்தல், கொரோனா வைரஸ் பற்றியும் தடுப்பூசி நன்மைகள் பற்றிய துண்டு பிரசுரங்கள் வழங்குதல் போன்றவைகள் மூலம் ஊக்குவிப்பு செய்தல் முகாம் சிறப்பாக நடைபெற அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், தொண்டு நிறுவனங்களின் சுய உதவி குழுக்கள், சமூக ஆர்வலர்கள், செஞ்சிலுவை சங்கங்கள் போன்ற இதர தன்னனார்வலர்கள் மூலம் ஊக்குவிப்பு செய்து அதிக அளவில் தடுப்பூசி செலுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

மேலும், முகாம் சிறப்பாக நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு நல்கி 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் 12.09.2021 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற உள்ள மாபெரும் தடுப்பூசி முகாமில் தங்களுடைய ஆதார் அட்டை (அ) இதர அரசால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையை கொண்டு வந்து தடுப்பூசி செலுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதுவரையில் அரியலூர் மாவட்டத்தில் கொரொனா தடுப்பூசி முதல் தவணை 42 சதவீதமும் இரண்டாம் தவணை 9 சதவீதமும் செலுத்தியுள்ளார்கள். மொத்தம் 3,17,937 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. நமது நலவாழ்வு நமது கைகளில் என்பது போல அனைவரும் தடுப்பூசி செலுத்திக்கொண்டு 100 சதவீத தடுப்பூசி செலுத்திக்கொண்ட மாவட்டமாக அரியலூர் திகழ வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

மேலும் முகாம் சிறப்பாக நடத்துதல் குறித்த ஆலோசனைகள் இக்கூட்டத்தில் வழங்கப்பட்டது. இம்முகாமில், கூடுதலாக தனியார் மருத்துவமனைகள், பாராமெடிக்கல் கல்லூரிகள் மற்ற கல்லூரிக**40,000 நபர்களுக்கு** ள் கலந்து கொண்டு முகாம் நடைபெறவுள்ளதால், பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டு அனைவரும் தடுப்பூசி செலுத்திக்கொள்ளுமாறு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.ஜெய்னுலாப்தீன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.சு.சுந்தர்ராஜன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.கீதாராணி மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**